நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வானூர்
முன்னிலை:- திருமதி.N.பீரித்தி, B.A.,B.L.
குற்றவியல் நீதித்துறை நடுவர், வானூர்.
2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 26-ம் நாள் வியாழக்கிழமை
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 253/2025
C.N.R.No.TNVP 36-001693-2025

அரசுக்காக.
காவல் ஆய்வாளர்,
கோட்டக்குப்பம் மதுவிலக்கு அமல் பிரிவு,
குற்ற எண்.31/2025 .... குற்றமுறையிடுபவர்

/எதிர்/

| | |
|---|---|
| எதிரி | செந்தில்குமார் (43/2025) த/பெ.மாரிமுத்து, ஆதனப்பட்டு கிராமம், வானூர் வட்டம் |

...... எதிரி

## CASE SUMMARY

| S.No. | Particulars | Report |
|---|---|---|
| 1. | The period of remand of the accused | Accused Remanded on 10-02-2025 and Released on Bail 20-02-2025 |
| 2. | The date of filing of the complaint/final report in the Court | Date of filing final report on 16-05-2025 Taken Cognizance on 16-05-2025 |
| 3. | The date of committal of the case to the Court of Session | Not Applicable |
| 4. | The date of 1st questioning of the accused under Sections 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be | Accused questioned on 12-12-2025 |
| 5. | Filing of all miscellaneous petitions and their results including the results on challange before superior courts: except routine petitions like petitions under section 317 of the | Nil |

| | | |
|---|---|---|
| | Code: | |
| 6. | Date of examination in – Chief and cross – Examination of a Witness | P.W.1 - Chief and Cross examined on 05-03-2026<br>P.W.2 - Chief and Cross examined on 18-03-2026 |
| 7. | Date of examination of the accused U/Sec.313 of the Code | 18-03-2026 |
| 8. | Details of abscondence of an accused and his appearance / production, as the case may be ; and NBW pending/recalled | Nil |
| 9. | Grant of stay by superior Courts and the results thereof | Nil |

இவ்வழக்கு 16/05/2025 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அது முதல் இந்நீதிமன்றத்தில் கவனமாக பரிசீலனையில் இருந்து வந்து குற்றம் முறையிடுவோர் தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்ற வழக்கு நடத்துனர் திரு.ராஜசேகர் நிலை 1 அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.புகழ்வேல் அவர்கள் முன்னிலையாகி இறுதி விசாரணைக்கு வந்து இருதரப்பு வாதுரைகளையும் கேட்டறிந்து ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

<u>அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிக்கையின் சுருக்கம்</u>

10/02/2025ம் தேதி 11:00 மணிக்கு வானூர் டு மைலம் ரோடு ரங்கநாதபுரம் ஜங்ஷனில் கோட்டக்குப்பம் மதுவிலக்கு அமல் பிரிவு காவல் ஆய்வாளர் மீனா மற்றும் தலைமை காவலர்களுடன் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது அங்கு சந்தேகத்திற்கிடமாக PY-01-AZ-4365 என்ற பதிவெண் கொண்ட Honda Splender Plus என்ற இருசக்கர வாகனத்தில் இவ்வழக்கின் எதிரி பாண்டிச்சேரி மாநில மதுபானங்களான Courrier Napoleon Brandy 180ML-29 Nos. பாண்டிச்சேரி மாநில மதுபாட்டில்கள்

வைத்துக்கொண்டும் அதில் Courrier Napoleon Brandy 180ML- 3 பாட்டில்களை மூடி திறந்து மூடிய நிலையில் வைத்துகொண்டும் எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ இன்றி அந்நிய மாநில மதுபானங்களை தனது சுயலாபத்திற்காக விற்பனை செய்யும் நோக்கில் மேற்படி இருசக்கர வாகனத்தில் கடத்தி வந்ததாக எதிரி மீது கோட்டக்குப்பம் மதுவிலக்கு அமல்பிரிவு காவல் நிலைய ஆய்வாளர் U/s.4(1)(a) r/w.4(1)(C), 4(1)(h) r/w.4(1)(A), 14(A) Tamilnadu Prohibition Amendment Act 2024-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு இவ்வழக்கின் எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் பேரில் எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையான பிறகு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களிலும் நகல்களும் BNSS 230 பிரிவின் கீழ் முறையாக இலவசமாக வழங்கப்பட்டது.

3) எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு, எதிரியிடம் குற்றம் பற்றி வினவியபோது, எதிரி தான் குற்றவாளி அல்ல என்று குற்றத்தினை மறுத்தார். எனவே இருதரப்பும் கேட்கப்பட்டும் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், எதிரி மீது குற்றச்சாட்டுகள் வனைவதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாக தெரிய வந்த காரணத்தினால், எதிரி மீது பிரிவுகள் 4(1)(a) r/w.4(1)(C), 4(1)(h) r/w.4(1)(A), 14(A) Tamilnadu Prohibition Amendment Act 2024-ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி கூறி வினவியபோதும், எதிரி தான் குற்றவாளி அல்ல என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்காட விருப்பம் தெரிவித்தார். எனவே, அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4) அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் 3 வரையிலான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அதில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலான சாட்சிகள்

விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன. பட்டியல் சாட்சிகளில் தலைமை காவலர் பாண்டியன் என்பவர் விசாரிக்காமல் விலக்கி கொள்ளபட்டார். அரசு தரப்பில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சான்று பொருள் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணம் மற்றும் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-</u>

10/02/2025ம் தேதி 11:00 மணிக்கு கோட்டக்குப்பம் மதுவிலக்கு அமல் பிரிவு ஆய்வாளர் திருமதி. மீனா என்பவருடன் தலைமை காவலர்கள் திரு.பாண்டியன் மற்றும் திரு.மோகன்தாஸ் ஆகியோர்கள் வானூர் டூ மைலம் ரோடு ரங்கநாதபுரம் ஜங்ஷன் அருகே வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது அங்கு சந்தேகத்திற்கிடமாக PY-01-AZ-4365 என்ற எண் கொண்ட Hero Honda Splender Plus இருசக்கர வாகனத்தை சோதனை செய்தபோது எதிரி பாண்டிச்சேரி மதுபான பாட்டில்களான Courrier Napoleon Brandy 180 ML – 29 Nos. மேற்படி பாட்டில்களில் 3 பாட்டில்கள் மூடி திறந்து மூடிய நிலையில் இருந்த பாட்டில்கள் எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ இல்லாமல் வைத்திருந்த எதிரியை கைது செய்து தலைமை காவலர்கள் பாண்டியன் மற்றும் மோகன்தாஸ் என்பவர்கள் முன்னிலையில் PY-01-AZ-4365 என்ற எண் கொண்ட Hero Honda Splender Plus இருசக்கர வாகனத்தை (புகைப்படம் அ.சா.ஆ.2) Courrier Napoleon Brandy 180 ML – 29 பாட்டில்கள் (புகைப்படம் அ.சா.ஆ.3) எதிரியிடமிருந்து கைப்பற்றி கைப்பற்றுதல் அ.சா.ஆ.1 தயார் செய்தார். பின்னர் நிலையம் வந்து எதிரி மீது நிலையக்குற்ற எண்.31/2025 பிரிவுகள் 4(1)(a) r/w.4(1)(C), 4(1)(h) r/w.4(1)

(A), 14(A) Tamilnadu Prohibition Amendment Act 2024-ன் படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 பதிவு செய்தார். பின்னர் சாட்சிகள் தலைமை காவலர்கள் மோகன்தாஸ் மற்றும் பாண்டியன் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட சான்று பொருளை படிவம் 91 அ.சா.ஆ.5 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். அன்றைய தினமே எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். சா.பொ.1 ஆன PY-01-AZ-4365 என்ற எண் கொண்ட Hero Honda Splender Plus இருசக்கர வாகனத்தை அரசுக்கு ஆதாயம் தேடும் பொருட்டு காவல் துணைக்கண்காணிப்பாளர் மதுவிலக்கு அமல்பிரிவு விழுப்புரத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள் 4(1)(a) r/w.4(1)(C), 4(1)(h) r/w.4(1)(A), 14(A) Tamilnadu Prohibition Amendment Act-ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

06) இவ்வழக்கில் தலைமை காவலர் திரு.மோகன்தாஸ் அ.சா.1 ஆகவும், காவல் ஆய்வாளர் திருமதி.மீனா, அ.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

07) இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக அமைந்த அரசு தரப்பு சாட்சிய பகுதிகளை எடுத்துரைத்து BNSS 351(1)(b) ன் கீழ் சுட்டிக்காட்டி வினவியபோதும் எதிரி அரசு தரப்பு சாட்சி கூறுவதை மறுத்து, தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் யாரும் இல்லை என்றும் கூறினார். இத்துடன் எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

08) இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டது. வழக்கின் ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

09) இவ்வழக்கில் தற்போது தீர்மானிக்கப்படவேண்யது யாதெனில் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா என்பதேயாகும்?

10) தலைமை காவலர் திரு.மோகன்தாஸ் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில்

"கடந்த 10.02.2025 அன்று ஆய்வாளர் மீனா தலைமையில் அவருடன் நானும் தலைமை காவலர் பாண்டியன் ஆகியோருடன் வானூர் ரூ மயிலம் ரோடு ரங்கநாதபுரம் ஜங்ஷன் வாகன சோதனை செய்துகொண்டிருந்தபோது PY-01-AZ-4365 என்ற எண் கொண்ட Hero Honda Splender Plus இருசக்கர வாகனத்தை நிறுத்தி விசாரிக்க முற்பட்டபோது அதை ஓட்டிவந்த நபர் தப்பி செல்ல முயன்றபோது நாங்கள் அவரை மடக்கி பிடித்தோம். அவர் இவ்வழக்கின் எதிரி செந்தில்குமார் ஆவார். அவர் வைத்திருந்த பையை சோதனை செய்து பார்த்தபோது மதுபானங்கள் Courier Nepolean Brandy 180 ml – 29 பாட்டில்கள் இருந்தது. அதில் 3 பாட்டில்கள் மூடி திறந்து மூடிய நிலையில் இருந்தது. மேற்படி பாட்டில்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட இருசக்கர வாகனம் ஆகியவைகளை எங்கள் முன்னிலையில் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார். பின்பு ஆய்வாளர் எதிரி மற்றும் கைப்பற்றுதல் மகசருடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.31/2025 பிரிவுகள் 4(1)(a), 4(1)(h) TNP Act 4(1)(C), 4(1)(A), 14(A) TNP Amendment Act எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்" என்று சாட்சியமளித்துள்ளார்.

11) இவ்வழக்கில் அ.சா.1டன் கண்காணிப்பு பணியில் உடன் இருந்ததாக அரசு தரப்பில் சொல்லப்படும் புலனாய்வு அதிகாரி திருமதி.மீனா, காவல் ஆய்வாளர் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.2 அ.சா.1ன் சாட்சியத்தை ஒத்து சாட்சியமளித்துள்ளார்.

12) அ.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் எதிரி ஓட்டி வந்த வாகனத்தை யார் சோதனை செய்தார்கள் என்று ஆய்வாளர் விசாரணையில்

தான் சொல்லவில்லை என்றால் சரிதான் என்றும், எதிரி பாண்டிச்சேரி மதுபானங்களை வாகனத்தில் எந்த இடத்தில் வைத்து எடுத்து வந்தார் என்று ஆய்வாளர் விசாரணையில் தான் சொல்லவில்லை என்றால் சரிதான் என்றும், எதிரி மேற்படி மதுபானங்களை பையில் எடுத்து வந்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த பையை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான் என்றும், சம்பவ இடம் அதிக மக்கள் கூடும் சாலை என்றால் சரிதான் என்றும், அந்த இடத்தில் தனிநபர்கள் யாரையும் சாட்சியாக எனது ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றால் சரிதான் என்று சாட்சியமளித்துள்ளார்.

13) புலன் விசாரணை அதிகாரியான அ.சா.2 அவரது குறுக்கு விசாரணையில் அ.சா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தை ஒத்து சாட்சியமளித்துள்ளார். மேலும் அவரது குறுக்கு விசாரணையில் படிவம் 91ல் சாட்சிகள் கையொப்பம் இல்லை என்றால் சரிதான் என்று சாட்சியமளித்துள்ளதிலிருந்து புலன் விசாரணை அதிகாரி எதிரியிடமிருந்து மதுபானங்களை கைப்பற்றினாரா என்பது சந்தேகத்திற்குரியதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இவ்வழக்கில் தனிநபர்களை சாட்சிகள் யாரையும் புலன் விசாரணை அதிகாரி விசாரிக்கவில்லை என்பதும் புலனாகிறது. எதிரிகளிடமிருந்து வழக்கு சொத்துக்கள் கைப்பற்றியதாக அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சியமளித்துள்ளபோதிலும் மேலும் அ.சா.1 மற்றும் அ.சா.2 காவலர்கள் ஆவர். இந்நிலையில் கைப்பற்றுதல் மகசர் மற்றும் படிவம் 91ல் தனிநபர் சாட்சிகள் முன்னிலையில் தயார் செய்யாமலும், தனிநபர் சாட்சிகளை விசாரிக்காமலும் புலனாய்வு அதிகாரி மேற்கொண்ட புலனாய்வில் நம்பகத்தன்மையில் சந்தேகமே ஏற்படுகிறது.

14) இவ்வாறான சூழ்நிலையில் விசாரணையில் எதிரி மதுபான பாட்டில்கள் கடத்தி சென்றாரா என்பதிலும் ஐயம் நிலவுகிறது. எனவே புலனாய்வு அதிகாரி

அவருக்கு புள்ளியியல் தேவைப்படுவதால் தவறான வழக்கை ஜோடித்துள்ளாரோ என்ற சந்தேகம் இந்நீதிமன்றத்திற்கு ஏற்படுகின்றது. மேலும் கைப்பற்றப்பட்ட சான்று பொருட்கள் எதிரியிடமிருந்துதான் கைப்பற்றப்பட்டது என்பதை உறுதியூட்டும் விதத்தில் தனிநபர் சாட்சிகள் யாரும் விசாரிக்காதது இவ்வழக்கில் நம்பகதன்மையில் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. எனவே, அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து எதிரி மீதான குற்றங்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை. இவ்வாறான சூழ்நிலைகளில் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக்கி எதிரியை இந்த வழக்கின் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15) எனவே எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் போதுமான சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக**

16) மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு, அரசு தரப்பில் இவ்வழக்கினை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக முடிவு செய்து, எதிரி மீது பிரிவு 4(1)(a) r/w.4(1)(C), 4(1)(h) r/w.4(1)(A), 14(A) Tamilnadu Prohibition Amendment Act-ன் கீழான குற்றச்சாட்டுக்களை ஐயம்திரிபற அரசு தரப்பு நிரூபிக்கவில்லை என தீர்மானித்து, எதிரியை மேற்சொன்ன பிரிவின் கீழ் குற்றவாளி அல்ல என்று தீர்மானித்து எதிரியை BNSS பிரிவு 271(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

17) இவ்வழக்கில் வழக்கு சொத்து எண்.38/2025-ல் உள்ள Courrier Napoleon brandy 180ml – 29 Nos. இதில் 3 brandy 1பாட்டில்கள் மூடி திறந்து

மூடிய நிலையில் இருந்ததை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற W.P.No.6126/2020, 06.01.2020 வழிகாட்டுதலின்படி அழிக்கப்பட்டுள்ளது. அம்மதுபானங்கள் அழிப்பதற்கு முன்பு புகைப்படங்கள் எடுக்கப்பட்டது. மேலும் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட PY-01-AZ-4365 என்ற எண் கொண்ட Hero Honda Splender Plus இருசக்கர வாகனத்தை அதன் உரிமையாளர் மனுதாக்கல் செய்து சி.எம்.பி.467/2025, 20/06/2025 உத்தரவின்படி பெற்று சென்றுள்ளபடியால் மேற்படி வாகனத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் உரிமையாளர் நிரந்தரமாக வைத்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது. மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு வாகனத்தின் பிணைப்பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

18) எதிரி ஏற்கனவே பிணையிலிருந்து வந்துள்ள நிலையில், மேல்முறையிட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லை எனில் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு எதிரியின் பிணைப்பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்பு முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 26-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

N PREETHI

Digitally signed by N PREETHI
Date: 2026.03.30 15:34:01 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வானூர்.

<u>பின் இணைப்பு -</u>
<u>அரசுத்தரப்பு சாட்சிகள்</u>

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.மோகன்தாஸ், தலைமை காவலர் |
| அ.சா.2 | திருமதி.மீனா, காவல் ஆய்வாளர் |

<u>அரசுத்தரப்பு சான்றாவணம்</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 10/02/2025 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.2 | 10/02/2025 | PY-01-AZ-4365 என்ற வாகனத்தின் புகைப்படங்கள் |
| அ.சா.ஆ.3 | 10/02/2025 | மதுபான பாட்டில்களின் புகைப்படங்கள் |
| அ.சா.ஆ.4 | 10/02/2025 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 10/02/2025 | படிவம் 91 |

<u>அரசுத்தரப்பு சான்று பொருள்</u> -

சா.பொ.1 PY-01-AZ-4365 என்ற எண் கொண்ட Hero Honda Splender Plus இருசக்கர வாகனம்

<u>எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்றுபொருள்</u> - இல்லை.

N PREETHI

Digitally signed by N PREETHI
Date: 2026.03.30 15:34:33 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வானூர்.